BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# பிராம்ப்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பானது, பீப் ஒலி மூலம் காற்றப்பட்டது எனும் இயக்கத்தில் பங்கெடுக்கிறது; இது ஃபயர் மார்ஷல் அலுவலகத்தினால் வழி நடத்தப்படுகிறது

பிராம்ப்டன், ON (செப்டம்பர் 6, 2023) – தீயிலிருந்து பாதுகாப்பு மற்றும் அதை எதிர்கொள்வதற்கான தயார்நிலையின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, ஒன்டாரியோவின் முதல் புகை உணரும் அலாரம் பற்றிய தினமாகிய (*Test Your Smoke Alarm Day)* செப்டம்பர் 28 ஆம் தேதியன்று, ஃபயர் மார்ஷல் அலுவலகம் (OFM) தலைமையில், பிராம்ப்டன் நகர நிர்வாகம் பங்கேற்கிறது.

மாகாணம் எங்கிலுமாக ஆங்காங்கே தீ விபத்துக்கள் அதிகரித்து வருவதால், OFM ஆனது பீப் ஒலி மூலம் காப்பாற்றப்படும் என்ற கல்வி புகட்டல் பிரச்சாரத்தை உருவாக்கியுள்ளது, இது குடியிருப்பாளர்கள் தங்கள் புகை அலாரங்களைச் சோதித்து வைப்பதற்கும் அவர்களின் வீடுகளை மேலும் தீப்பிடிப்பதிலிருந்து பாதுகாப்பானதாக மாற்றுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஊக்குவிக்கிறது.

புகை உணரும் அலாரங்கள், கார்பன் மோனாக்சைடு உணரும் அலாரங்கள் மற்றும் வீட்டை விட்டுத் தப்பிக்கும் திட்டம் ஆகியவற்றைப் பற்றி குடியிருப்பாளர்களுக்குக் கற்பிக்க, பிராம்ப்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவை அமைப்பானது பீப் ஒலி மூலம் காப்பற்றப்பட்டது (Saved by the Beep) எனும் இயக்கத்தில் இல் பங்கேற்கிறது.

செப்டம்பர் முழுவதும், பிராம்ப்டன் நகரம் மற்றும் BFES ஆகியவை சமூக ஊடகங்களில் தகவல்களைப் பகிர்ந்துகொள்வதோடு, வீடுகளில் தீயிலிருந்து பாதுகாப்பு என்பதன் முக்கியத்துவம் மற்றும் தீ ஏற்பட்டால் குடியிருப்பாளர்கள் தயாராக இருப்பதை உறுதிசெய்ய அவர்கள் பயன்படுத்தக்கூடிய குறிப்புகள் பற்றி விவாதிக்க நேரில் இருந்து காணும் நிகழ்வை நடத்தும்.

**தீயணைப்பு வீரர் ஒருவருடன் காபி சுவைக்க எங்களுடன் இணையுங்கள்**

**என்ன:** ஸ்பார்க்கி (Sparky) என்ற தீயணைப்புத் துறை நாயைச் சந்தித்து உங்கள் புகை உணரும் அலாரம் கருவிக்கான தினம் (*Test Your Smoke Alarm Day)* மற்றும் வேலை செய்யும் நிலையிலுள்ள புகை உணரும் அலாரங்கள் மற்றும் தீயிலிருந்து பாதுகாப்பு பற்றி அறிய:

**தேதி:** வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 22

**நேரம்: காலை** 9 முதல்-11 மணி வரை

**எங்கே: மெக்டொனால்ட்ஸ் (**McDonalds), 160 சாண்டல்வுட் பார்க்வே கிழக்கு (Sandalwood Parkway East)

BFES அமைப்பானது தங்களின் பீப் ஒலி மூலம் காப்பற்றப்பட்டது (*Saved by the Beep)* இயக்கம் சார்பான நடனத்தினை சமூக ஊடகங்களில் பதிவிட்டு குடியிருப்புவாசிகள் போட்டியிடும் வண்ணம் விழிப்புணர்வைப் பரவச்செய்வதற்காக அவர்களை சவாலுக்கு அழைக்கிறது. அனைத்து வயதினரும் அனைத்து திறன் நிலை கொண்டவர்களும் இலகுவாக நடனமாடும் வகையில் அவர்கள் அமைத்திருக்கிறார்கள். புகை உணரும் அலாரப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வைப் பரவச்செய்ய, சமூக ஊடகங்களில் உங்களின் வீடியோக்களை பதிவிடுங்கள்; இதற்காக #SavedByTheBeep டேக் உபயோகித்து நீங்களே பீப் ஒலியை எப்படி சோதிக்கிறீர்கள் எனப் பாருங்கள். @citybrampton Instagram இல் நடனத்தை (dance) எப்படி ஆடுவது எனப் பாருங்கள்.

மேலும் தகவல்கள், தீத்தடுப்பு பாதுகாப்பு குறிப்புகள் மற்றும் தீயிலிருந்து உங்கள் வீட்டை எப்படி பாதுகாப்பாக வைப்பது என அறிய வருகை தாருங்கள் www.bramptonfire.com

**அறிஞர் கூற்றுக்கள்**

"தீயிலிருந்து பாதுகாப்பு என்பது இன்னும் அதிகமாக விவாதிக்கப்பட வேண்டிய தலைப்பாகும். புகை உணரும் அலாரங்கள் உயிர்களைக் காப்பாற்றுவதோடு, மக்கள் தங்கள் வீடுகளில் புகை உணரும் அலாரங்களைப் பரிசோதிப்பதை நினைவூட்டுவதற்காக மாகாணம் முழுவதும் ஒரு தீ விபத்து ஏற்பட்டால் எங்கள் குடியிருப்பாளர்களைப் பாதுகாப்பது எப்படி என்பதற்கான ஒரு நாளை அனுசரிப்பது, அடுத்து ஒரு படியாகும். இந்த அருமையான பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக இருப்பதில், மற்றும் தீயிலிருந்து பாதுகாப்பு என்பதன் முக்கியத்துவம் குறித்து பிராம்ப்டனில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்."

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், பிராம்ப்டன் நகரம்*

“பீப் ஒலி மூலம் காப்பாற்றப்பட்டது (Saved by the Beep ) எனும் பிரச்சாரத்தில் பங்கேற்பதில் நாங்கள் பரவசமடைகிறோம். புகை உணரும் அலாரங்கள் உயிர்களைக் காப்பாற்றுவதோடு, குடியிருப்பாளர்களின் புகை உணரும் அலாரங்களை மாதந்தோறும் சோதித்துப் பார்க்க நினைவூட்டுவது அவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும். தீ விபத்து ஏற்பட்டால் வீட்டை விட்டுத் தப்பிக்கும் ஒரு திட்டத்தைக் வைத்திருந்து தயாராக இருக்கும்படி குடியிருப்பாளர்களை ஊக்குவிக்கிறோம். தீப்பிடிக்கும் சமயத்தில் ஒவ்வொரு நொடியும் முக்கியமானது மற்றும் தயாராக இருப்பது என்பது, உயிர்களைக் காப்பாற்ற இயலும்.”

- ராப் மார்ட்டின், இடைக்கால தீயணைப்புத்துறைத் தலைவர், பிராம்ப்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பு

“பிராம்ப்டன் நகர நிர்வாகம் மற்றும் பிராம்ப்டன் தீயணைப்புத் துறை ஆகியவை உங்களுக்கான புகை உணரும் அலாரத்திற்கான தினத்தை பீப் ஒலி மூலம் காப்பற்றப்பட்டது (*Saved by the Beep)* எனும் பிரச்சாரத்தின் மூலம் மேம்படுத்துவதற்கான எதிர்பார்ப்புகளை மீறியுள்ளன. இந்த உயிர்காக்கும் செய்தியைக் கொண்டு செல்ல, பிராம்ப்டன் நகர நிர்வாகம் வெளிப்படுத்திய படைப்பாற்றல் உண்மையிலேயே பாராட்டுக்குரியது. ஒன்ட்டாரியோ பகுதியை தீயிலிருந்து பாதுகாப்பானதாக ஆக்க பிராம்ப்டனுக்கும் OFM க்கும் இடையிலான ஒருங்கிணைந்த முயற்சியைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நாம் பார்க்க வேண்டிய மாற்றத்தை இந்த ஒத்துழைப்பு கொண்டுவரலாம் என்பதை நிரூபிக்கும் வகையில் இது இருக்கும்.”

- ஜான் பெக், ஃபயர் மார்ஷல்

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 90,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

MEDIA CONTACT

**ஊடக தொடர்புகள்**

multiculturalmedia@brampton.ca